**பத்திரிக்கைசெய்தி**

**மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகம்,நாகர்கோவில்**

H/8105/2020 நாள்:17.07.2021

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய மாவட்ட ஆட்சித்தலைவரின் செய்திக்குறிப்பு:-

- கன்னியாகுமரி மாவட்டத்தில் வரும் திங்கள் கிழமை முதல் ஆதார் பதிவு / திருத்தங்களுக்காக ஆன்லைன் முன்பதிவு முறை அமல்படுத்தப்படுகிறது. அதன்படி www.kanniyakumari.nic.in என்ற இணையதளத்தில் ”ஆதார் திருத்தம் - முன்பதிவு” (Aadhar Correction – Online appointment) என்ற இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தெரிவு செய்து தேவையான தாலுகாவைத் க்ளிக் செய்து பொதுமக்கள் தங்களது பெயர், பிறந்த தேதி மற்றும் தொலைபேசி எண் விபரத்தை மட்டும் பதிவு செய்து டோக்கனைப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம் பொதுமக்கள் அதிகாலையிலேயே ஆதார் பதிவுக்காக காத்திருப்பது தவிர்க்கப்படும். அத்துடன் கூட்டங்கள் குறைவதன் மூலம் நோய்த்தொற்று அபாயமும் குறையும். பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்குப் போதுமான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், களப்பணியாளர்கள் மூலமாகவும், சோதனைச்சாவடிகள் மூலமாகவும் இதுவரை 8,60,448 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தற்போது மொத்தம் 183 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். இதில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 36 பேரும், கோவிட் கவனிப்பு மையங்களில், தனியார் மருத்துவமனைகளில் 147 பேரும் சிகிச்சையில் உள்ளனர்.
- 16/07/2021 அன்று 27 நபர்களுக்கு கொரோனா நோய்த்தோற்று ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 57,587 பேர் இதில் 55,325 பேர் முற்றிலும் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று (17.07.2021) முதல் கட்ட தடுப்பு மருந்து 10,038 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 4016 நபர்களுக்கும் ஆக மொத்தம் 14,054 நபர்களுக்கு கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக இதுவரை முதல் கட்ட தடுப்பு மருந்து 3,56,323 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 76,637 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது
- கன்னியாகுமரி மாவட்டத்தில் முககவசம் அணியாதது மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றாதது ஆகிய காரணங்களுக்காக இன்று மட்டும் 82 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 16,400 வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 97,931 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 2,17,88,670/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மாவட்டஆட்சித்தலைவர்
கன்னியாகுமரிமாவட்டம்.